**செய்தி வெளியீடு எண்: 389** **நாள்: 02.07.2019**

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு.க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக பணியாற்றி வந்த முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் 30.6.2019 அன்று பணிஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, நிதித்துறையில் கூடுதல் தலைமைச் செயலாளராக பணியாற்றி வந்த திரு.க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் நேற்று (1.7.2019) மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

திரு.க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் கடந்த 9 ஆண்டுகளாக நிதித்துறையின் பொறுப்பை கவனித்து வந்தார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**